நகரமன்றம், குடியாத்தம் நாள் : 03.01.2020

# அறிவிப்பு

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எச்.இரமேஷ்,பி.எல்., நகரமன்ற தனி அலுவலர்**

## கூட்ட நிரல்

| வ. எண் | பொருள்கள் ஜனவரி 2020 சாதாரண கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் 14" CFC Grant 2019-20 திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் புதிதாக தார்சாலைகள், பேவர்பிளாக் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க மற்றும் புதுப்பிக்க வேண்டி ரு.268.00 இலட்சம் மதிப்பீட்டிலான கீழ்காணும் பணிகளுக்கு திட்டப்பிரேரணை தயார் செய்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டி பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 01 | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரு. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface with Drain to Pasumathur Head Works Road, Vaitheeswaran Nagar Main Road in Ward No.14 | 41.00 |
| 2 | Providing Paver Block with Drain to Rajilpatti Lane (Muthumariyamman Kovil) NGO Colony, R.V.Gopal 3rd Street, Kavarai Street Lane, PATC Depot Lane Street, Sathu Bajanai Kovil Street, Sengunthar Mandapam Opp in Ward No.11, 12, 13, 14, 32 & 35 | 41.00 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>Providing BT Surface with Drain to Kondasamuthiram Street, Nari Kullappan Street, Kaspa Hostel Back side in Ward No.7, 11 & 14</td><td>50.00</td></tr>
<tr><td>4</td><td>Providing BT Surface with Drain to Variyar Nagar, Kallapadi Kandhappan Street in Ward No. 14 & 32</td><td>43.60</td></tr>
<tr><td>5</td><td>Providing BT Surface with Drain to APM Mahal (Raja Ganapathi Nagar) & Ambedkar Nagar, Perumal Nagar, Azhagu Perumal IKoil Street in Ward No.10 & 14</td><td>47.60</td></tr>
<tr><td>6</td><td>Providing BT Surface with Drain to Kosa Annamalai Street, Mandaveli Periyathambi Street, Congress House Road, Melpatti Road to Tharai Palam in Ward No.17, 18, 20 & 35</td><td>44.80</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>268.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலுரர் அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் பெறவும், மண்டல செயற்பொறியாளர், வேலுரர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. மேற்காணும் திட்டத்திற்கு 14-வது நிதிக்குழு 2019-20-ம் ஆண்டிற்கான அரசு மான்யத்திலிருந்து ரு.268.00 இலட்சம் பெற்று திட்டம் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>
4. வரவு செலவு திட்டம் 2019-20-ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.<br>
(ந.க.எண்.இ1/0056/2019)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>2</td>
<td>
குடியாத்தம் நகராட்சி LED விளக்குகளால் ஒளிரும் முகப்பு பலகை 12’ x 3’ அளவு செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>பலராமன் ஸ்டோன் ஆர்ட்ஸ், குடியாத்தம்</th><th>Madhan Laser Graphics, Gudiyatham</th><th>Sun Designs, Gudiyatham</th></tr>
<tr><td>1</td><td>குடியாத்தம் நகராட்சி LED விளக்குகளால் ஒளிரும் முகப்பு பலகை 12’ x 3’ அளவுசெய்தல் பணி</td><td>52500.00</td><td>58250.00</td><td>61500.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி
</td>
<td>02</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>வழங்கியுள்ள பலராமன் ஸ்டோன் ஆர்ட்ஸ், குடியாத்தம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகை ரூ.52,500/-க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.இ1/2078/2019)</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் சேமநலநிதித் தொகை கருவூலகத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி கருவூல இருப்பின் மீது வட்டியும், பணியாளர்களின் தனி நபர் வட்டியும் 5-வது ஊதியக்குழு மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களின் சேமநல நிதிக்கான வட்டியும் 2008-2009 முதல் 2018-2019 வரை கணக்கீடு செய்து பணி முடித்து ஒப்படைப்பு செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் நிறுவனங்கள் தங்கள் விலைப்புள்ளிகளை 23.12.2019 அன்று அளித்துள்ளார்.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>பணி</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>VENKAT EVENTS,<br>No.13, Vel Nagar Extn.<br>Adambakkam<br>Chennai – 600 088.</td><td>1) கருவூல இறுதி இருப்பிற்கு வட்டி கோரும் கருத்துரு தயாரிக்க (வருடம் 1-க்கு) மற்றும் 5-வது ஊதியக்குழு வட்டி (2008-2009 முதல் 2018-2019 வரை)<br>2) தனிநபர் வட்டி (வருடம் 1-க்கு நபர் 1-க்கு)<br>3) நகல் எடுக்க</td><td>ரூ.6000<br>ரூ.60<br>ரூ.3.90</td></tr>
<tr><td>2</td><td>RAJREV SOFT SYSTEM<br>No.2, Muthiayal Reddy Nagar,<br>3rd Street, Adambakkam<br>Chennai – 600 088.</td><td>1) கருவூல இறுதி இருப்பிற்கு வட்டி கோரும் கருத்துரு தயாரிக்க (வருடம் 1-க்கு) மற்றும் 5-வது ஊதியக்குழு வட்டி (2008-2009 முதல் 2018-2019 வரை)<br>2) தனிநபர் வட்டி (வருடம் 1-க்கு நபர் 1-க்கு)<br>3) நகல் எடுக்க</td><td>ரூ.5000<br>ரூ.50<br>ரூ.3.00</td></tr>
<tr><td>3</td><td>NTECH SOLUTION<br>No.10, Gowthamar Street<br>East Tambaram,<br>Chennai – 600 059.</td><td>1) கருவூல இறுதி இருப்பிற்கு வட்டி கோரும் கருத்துரு தயாரிக்க (வருடம் 1-க்கு) மற்றும் 5-வது ஊதியக்குழு வட்டி</td><td>ரூ.5500</td></tr>
</table>
</td>
<td>03</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td>(2008-2009 முதல் 2018-2019 வரை)</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>2) தனிநபர் வட்டி (வருடம் 1-க்கு நபர் 1-க்கு)</td><td>ரூ.55</td></tr>
<tr><td></td><td></td><td>3) நகல் எடுக்க</td><td>ரூ.3.50</td></tr>
</table>
மேற்காணும் விலைப்புள்ளிகளை அளித்துள்ள முன்று நிறுவனங்களில் வரிசை எண்.2 இல் உள்ள நிறுவனமான RAJREV SOFT SYSTEM, Chennaiஅவர்கள் மற்ற நிறுவனங்களைவிட குறைவான விலைப்புள்ளியினை அளித்துள்ளார். மேலும், இந்த நிறுவனம் மேற்கண்ட பணிகளை திருப்பத்துார் நகராட்சி, இராணிப்பேட்டை நகராட்சி, அனகாபுத்துார் நகராட்சி மற்றும் திருவத்திபுரம் நகராட்சி ஆகிய நகராட்சிகளில் இப்பணியினை செய்து ஒப்படைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளில் அதிக அனுபவமும், மற்ற நிறுவனங்களைவிட குறைவான விலைப்புள்ளியினை வழங்கிய RAJREV SOFT SYSTEM, Chennaiஅவர்களுக்கு பணியினை ஒப்படைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :<br>
1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளவரும் மற்ற நகராட்சிகளில் பணி உத்தரவு பெற்றவருமான RAJREV SOFT SYSTEM, Chennaiஅவர்களுக்கு இப்பணியினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,75,000/- மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.பி4/3587/02)
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இயங்கி வரும் TATA ACE வண்டி எண். T.N.23 CW9353 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், கிளர்ச் மற்றும் டீசல் பம்பு சர்வீஸ் செய்ய Susee Trucks Pvt. Ltd., என்ற நிறுவனத்தின் மூலம் பழுதுகள் சரி செய்ய ஆகும் செலவினம் ரூ-7500/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்.<br>
1. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று Susee Trucks Pvt. Ltd., என்ற நிறுவனத்தின் முலம் பழுதுகளை சரி செய்ய பணியினை ஒப்படைக்க உத்தரவு வழங்கலாம். இதற்கான செலவு தொகையை வருவாய் நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3679/2019/எச்1)
</td>
<td>04</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஆணையாளர் / தனி அலுவலர்
குடியாத்தம் நகராட்சி.

நகரமன்றம், குடியாத்தம் நாள் : 14.01.2020

# அறிவிப்பு

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

## முன்னிலை : திரு.எச்.இரமேஷ்,பி.எல்., நகரமன்ற தனி அலுவலர்

## கூட்ட நிரல்

| வ. எண் | பொருள்கள் ஜனவரி 2020 அவசரக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி முதல்நிலை நகராட்சியாக 25.03.1973 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டுவரும் காலத்திலிருந்தே தரநிலைக்கு ஏற்றவாறு பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு மேலாளர் நிலை - II மற்றும் கணக்கர் நிலை - IV என்ற நிலையில் பணியிடங்கள் ஏற்கனவே இருந்து வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 28 கடித ந.க.எண்.15891/2016/எச்1 நாள் 06.01.2020 இல் நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படி, நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தும் மற்றும் நகராட்சி நிலைகளுக்கேற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த வேண்டியுள்ளதால், செயற்குறிப்புகளை அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் உத்தேசிக்கப்பட்டுள்ள குறியீட்டின்படி இந்நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப கூடுதலாக வருவாய் அலுவலர் (நிலை - IV) நிலையில் பணியிடம் தோற்றுவிக்கப்பட (Additional Posts to be created as per norms) வேண்டியுள்ளது. இப்பணியிடமானது வரிவசூல் பணிகளை மேம்படுத்த அவசியம் தேவைப்படுவதால், மேற்படி பணியிடத்தினை தோற்றுவிக்க தேவையான செயற்குறிப்புகளை வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக சென்னை நகராட்சி | 05 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாக ஆணையருக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**வ. எண்** \| **பதவி** \| **முதல்நிலை நகராட்சி தரத்திற்கேற்ப அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்** \| **முதல்நிலை நகராட்சி தரத்திற்கு கூடுதலாக புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடத்தின் விவரம் மற்றும் ஊதிய விபரம்**<br>1 \| மேலாளர் நிலை II \| 1 \| __<br>2 \| கணக்கர் நிலை IV \| 1 \| __<br>3 \| வருவாய் அலுவலர் நிலை IV \| இல்லை \| வருவாய் அலுவலர் (நிலை-IV) (PB29300-34800 + தர ஊதியம் 4200) திருத்திய ஊதிய விகிதம் - நிலை–II ரூ.35400/112400<br><br>அலுவலக குறிப்பு :-<br>முதல் நிலை நகராட்சி தரத்திற்கேற்ப கூடுதலாக வருவாய் அலுவலர் நிலை–II பணியிடம் புதியதாக தோற்றுவிக்கவும், அதற்கான ஊதியம் வழங்கவும் உரிய பிரேரணை வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.சி1/608/2017) | | |
| 2 | குடியாத்தம் நகராட்சி பகுதியில் தெருவிளக்குகளில் குழல் விளக்கு - 1709, சி.எப்.எல் விளக்கு - 126, எல்.இ.டி. விளக்கு - 842 என மொத்தம் 2677 எண்கள் நகராட்சியால் பராமரிக்கப்படுகிறது.<br><br>**வரிசை எண்** \| **தெருவிளக்குகளின் பெயர்** \| **எண்ணிக்கை**<br>1 \| **4'x40 வாட்ஸ் குழல் விளக்குகள்** \| 1709<br>2 \| 4 x 24 வாட்ஸ் CFL விளக்குகள் (உயர்கோபுர மின் விளக்குகள்) \| 104<br>3 \| 1 x 65 வாட்ஸ் CFL விளக்குகள் \| 22<br>4 \| 18 வாட்ஸ் CFL விளக்குகள் \| 630<br>5 \| 36 வாட்ஸ் CFL விளக்குகள் \| 95<br>6 \| 80 வாட்ஸ் CFL விளக்குகள் \| 45<br>7 \| 150 வாட்ஸ் CFL விளக்குகள் \| 72<br> \| **மொத்தம்** \| **2677**<br><br>மேற்படி தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தற்போது ஒரு மின் | 06 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | கம்பியாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இவையனைத்தும் ஒரு மின் கம்பியாளர் மற்றும் ஒரு மின்கம்பி உதவியாளரை கொண்டு பராமரிக்கப்படுவதால் தெருவிளக்கு தொடர்பாக பொது மக்கள் அளிக்கும் புகாரின் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு விளக்குகளை எரிய வைக்க இயலாத நிலை ஏற்படுகிறது. இருந்தபோதிலும் குடிநீர் விநியோகம் மற்றும் இதர பிரிவு பணியாளர்களை கொண்டு மாற்றுப்பணி அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே, தெருவிளக்கு பராமரிப்பு தொடர்பான சேவையை தரம் உயர்த்தவும், அது தொடர்பான பொது மக்கள் புகார்களை விரைந்து உடனுக்குடன் கவனித்து குறைகள் களையவும், தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.64907/2003/E1 நாள் 16.12.2014 உள்ள அறிவுரைகளின்படி தனியார் வசம் ஒப்படைத்து பராமரிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>தெருவிளக்கு முதலாம் ஆண்டு பராமரிப்புப் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.30.09 இலட்சத்திற்கு தனியார் வசம் ஒப்படைத்து பராமரிக்க அதற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 28 அவர்களிடம் பெறவேண்டி திட்டப்பிரேரணை தயார் செய்து அனுப்ப மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை தனியார் வசம் ஒப்படைத்து பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திருத்திய வரவு செலவு திட்டம் 2019-2020-ன் கீழ் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.இ1/2078/2019) | | |
| 3 | வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண்.407, நாள் 14.12.2018-ல் வார்டு வரையறைக்கான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.<br>இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பெற்ற 13.01.2020 தேதிய கானொளி காட்சி கூட்டத்தில் நடைபெற்ற கானொளி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.575/2020/தேர்தல், நாள் 21.01.2020-ல் வார்டு மறுவரையறையினை மறு அறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழிமுறையாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. | 07 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | இதன் பொருட்டு குடியாத்தம் நகராட்சிக்கான வார்டு மறுவரையறையினை மறு அறிவிக்கை செய்வதற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :- மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.(ந.க.எண்.எப்1/1670/2017) | | |
| 4 | இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனங்களுக்கு வருடாந்திர இன்சூரன்ஸ் புதுப்பிக்க வேண்டும். அதன் காலம் 30.01.2020-ல் முடிவடைவதால் சாலை வரியின் காலம் 31.03.2020-ல் முடிவடைய உள்ளதால் 2020-2021-ம் ஆண்டிற்கான இன்சூரன்ஸ் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் புதுப்பிக்கவும் மற்றும் சாலை வரி கிரேட் 1 மோட்டார் வாகன ஆய்வாளர் குடியாத்தம் என்ற முகவரிக்கு ஆகும் தோராய செலவுத் தொகை ரூ.2.5/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் புதுப்பிக்க ஆகும் செலவுப் பட்டியல் தொகை வழங்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.எச்1/151/2020) | 08 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதகளில் உள்ள 20 எண்ணிக்கை அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/16/J2 நாள் : 26.10.2017-ன்படி 15.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஏஜென்சிஸ் மற்றும் கான்ட்ராக்டர்ஸ், குடியாத்தம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், மேற்படி பள்ளிகள் தினசரி சுத்தம் செய்திட பிரஸ், ஆர்பிக், துடப்பம், ஆசிட் மற்றும் பெனாயில் ஆகிய பொருட்கள் சப்ளை செய்யும் பணி தற்போது 31.12.2019 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 01.01.2020 முதல் ஓராண்டுக்கு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.எச்1/3237/2016) | 09 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | இந்நகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு பணிகள் DBC நபர்கள் மூலமாக டெங்கு தடுப்பு பணியில் பிப்ரவரி 2020 முதல் ஜூலை 2020 வரையிலான காலங்களில் ஈடுபடுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.32.00 லட்சத்தினை அனுமதிக்க மன்றத்தின் முன் | 10 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- இந்நகராட்சிப் பகுதியில் ஆங்காங்கே டெங்கு நோய் காணப்படுவதால் அதனை தடுப்பதற்கு தடுப்பு பணிகளை செய்ய DBC நபர்கள் ஈடுபடுத்தி தடுப்பு நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.E2/8441/2016 நாள் : 25.07.2016-ல் Fixation of Rates 2016-2017-ம் ஆண்டின்படி, நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.254/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபடி 01.02.2020 முதல் 31.07.2020 வரையில் DBC நபர்களை டெங்கு தடுப்பு பணியில் ஈடுபடுத்தி வருவதை மன்றம் அனுமதிக்கலாம். அதற்கான செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.431/2012/எச்1) | | |
| 7 | இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் துப்புரவுப்பணிகள் செய்ய கிருமி நாசினி சுண்ணாம்பு நீர் மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்றவை தேவைப்படுவதாலும், மேலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப்பணி மேற்கொள்ளவும், வருங்காலம் மழைக்காலமாக உள்ளதாலும், திருவிழா காலங்கள், கோவில் விழாக்காளாக இருப்பதாலும், பொது கூட்டம், சுகாதாரம் பாதிக்கும் இடங்களான பேருந்து நிலையம், அலுவலகப் பயன்பாடு மற்றும் நுண்உர மையம் ஆகிய பகுதிகளில் அவசியம் தேவைப்படுவதால் பளீச்சிங் பவுடர் - 2 டன், பினாயில் - 200 லிட்டர், ஆசிட் - 100 லிட்டர், சோப்பு ஆயில் - 100 லிட்டர் மற்றும் லைசல் - 50 லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.113720/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு கற்பகம் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/3771/2017) | 11 | அனுமதிக்கப்பட்டது |

ஆணையாளர் / தனி அலுவலர்
குடியாத்தம் நகராட்சி.